## Link tag

HTML இல் உள்ள <link> குறிச்சொல் ஒரு documentற்கும் வெளிப்புற resourceற்கும் இடையிலான இணைப்பை வரையறுக்கப் பயன்படுகிறது. Link tag முக்கியமாக external style sheetகளுடன் இணைக்கப் பயன்படுகிறது. இதை head sectionல் மட்டுமே பயன்படுத்த முடியும்.

***General Format***

<link rel="..." href="...">

*Example*

<link rel="stylesheet" href="style.css">

## Anchor tag

HTML ஆங்கர் டேக் ஒரு பக்கத்தை மற்றொரு பக்கத்துடன் இணைக்கும் ஹைப்பர்லிங்கை வரையறுக்கிறது. இது மற்ற இணையப் பக்கம் மற்றும் கோப்புகள், இருப்பிடம் அல்லது எந்த URL க்கும் ஹைப்பர்லிங்கை உருவாக்க முடியும். <a> tagல் உள்ள "href" attribute absolute URL அல்லது relative URLஐப் பயன்படுத்தி இலக்கு பக்கத்திற்கான இணைப்பை வழங்குகிறது.

***General Format***

<a href = "..."  target="..."> Link Text </a>

***attribute***

- href - இலக்கு file அல்லது webpageன் முகவரியை வரையறுக்க இது பயன்படுகிறது.
- target - இணைப்பை எங்கு திறக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட இது பயன்படுகிறது. இதற்கான மதிப்புகள் _blank, _self, _parent மற்றும் _top.

***Link Properties***

ஒரு web pageல் உள்ள linkஐ பயனர் பார்வையிட்டுவிட்டாரா இல்லையா என்பதை எளிதாக தெரிவிப்பதற்கு இந்த link properties பயன்படுகிறது. இது மூன்று வகைப்படும்.

1. Unvisited Link: இந்த link blue கலரில் underline செய்யப்பட்டிருக்கும்.
2. Visited Link: இந்த link purple கலரில் underline செய்யப்பட்டிருக்கும்.
3. Active Link: இந்த link red கலரில் underline செய்யப்பட்டிருக்கும்.

***Link Types***

Anchor tagல் கொடுக்கப்படும் link இரண்டு வகைப்படும்

1. Internal Link: இந்த link அதே websiteல் உள்ள ஒரு resourceஐ குறிக்க பயன்படுத்தப்படும்.
2. External Link: இந்த link வேறுஒரு websiteல் உள்ள ஒரு resourceஐ குறிக்க பயன்படுத்தப்படும்.

*Example*

```
<a href="https://www.google.com" target="_blank">Open Google</a>
```

Imageகள் மற்றும் buttonகளுக்கான இணைப்புகளை வழங்க ஆங்கர் டேக் பயன்படுத்தப்படலாம்.

*Example*

```
<a href="audio.html"><img src="imgaudio.png" width="50" height="50"></a>
<a href="video.html"><input type="button" value="Video"></a>
```